**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இராதாபுரம்**

அரசு தரப்பு 1 வது சாட்சி ( அ.சா. 1 )

<u>ஆண்டு பட்டிகை வழக்கு எண். 1534/2020</u>

STATEMENT OF WITNESS

| | | |
|---|---|---|
| பெயர் | - | பெருமாள் |
| தந்தை/கணவர் பெயர் | - | சுப்பையா |
| வயது | - | |
| ஊர் | - | |
| மதம் | - | |

**<u>முதல் விசாரணை</u>** Date: 16 /11 /2021

நான் தற்போது ஈனன்குடியிருப்பில் வசித்து வருகிறேன். விவசாய வேலை பார்க்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எனது ஊர்க்காரர் தான். காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1. 01/10/2019 -ம் தேதி மாலை 5.15 மணியளவில் எனது தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்ச சென்று கொண்டிருந்தேன். அப்போது எதிரியும், அவரது மனைவியும் சென்று கொண்டிருந்தார்கள். அச்சமயம் எதிரி என்னை மரியாதை இல்லாமல் அழைத்து அசிங்கமாக பேசினார். நான் காது கேட்காததுபோல சென்றேன். உடனே எதிரி பக்கத்தில் வந்து கம்புவை கொண்டு தலையின் இடது பக்கத்திலும், இடது கன்னத்திலும், வலது காலிலும் அடித்தார். வலி தாங்க முடியாமல் நான் அலறி கொண்டு ஓடினேன். அங்கிருந்த பச்சைமால், ராஜா ஆகியோர்கள் என்னை ஆட்டோ பிடித்து ஏற்றி விட்டனர். ராதாபுரம் அரசு மருத்துவமனையில் சிகிட்சைக்காக சேர்ந்தேன். அங்கு வந்த போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் வாக்குமூலம் அளித்தேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** - வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.